**கவனிக்க** .- இவ்வாரம் வெளியாகும் வர்த்தமானி பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டத்தின் நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று சிங்களம்,தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2481- 2026 මාර්තු මස 20 වැනි සිකුරාදා - 2026.03.20

2481 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 28 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க** .- தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை ( திருத்தம்) சட்டமூலம் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**கவனிக்க** .- பணம் துய்தாக்கல் தடை ( திருத்தம்) சட்டமூலம் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**கவனிக்க** .- நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் ( திருத்தம்) சட்டமூலம் 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 10ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மாச்சு மாதம் 27ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் .

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

27- B 82773 - 403 (2026/03)

# நானாவித அறிவித்தல்கள்

## கம்பனி கலைத்தல் தொடர்பான அறிவித்தல்

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் கொழும்பில் அமர்ந்து அதன் சிவில் அதிகார வரம்பை பயன்படுத்தி

ATOM SPORTS (Private ) Limited,
தொடர்பான விவகாரத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இல. 803,
One Galle Face Office Tower, கொழும்பு -01.

*- மற்றும்-*

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் விதிகளின் கீழ் நீதிமன்றத்தின் மூலம் கம்பனியை கலைப்பதற்கான மனு தொடர்பாக.

வழக்கு இல. : HC(Civil) 58 /2025/ CO
வழக்கின் தன்மை : கம்பனி கலைப்பு

*மனுதாரர்*

ATOM SPORTS (Private ) Limited,இல. 803, One Galle Face Office Tower, கொழும்பு -01.

*முறைப்பாட்டாளர்*

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், மேற்கூறிய கம்பனியை நீதிமன்றத்தின் மூலம் கலைக்க ( Winding Up) கோரிய முறைப்பாடு, மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில் (கொழும்பில் அமர்ந்து அதன் சிவில் அதிகாரத்தைப் பயன்படுத்தும் போது ) 2025, ஒற்றோபர் 09 ஆந் திகதி மேற்கூறிய ATOM SPORTS (Private ) Limited,இல. 803, One Galle Face Office Tower, Colombo -01 என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், குறித்த முறைப்பாடு 2026, மே மாதம் 12 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கூறிய கம்பனியின் ஏதேனும் கடனளிப்பவர் (Creditor) அல்லது பங்களிப்பாளர் / பங்குதாரர் (Contributory) இம் முறைப்பாட்டின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவு வழங்கப்படுவதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பினால், அவர்கள் குறித்த விசாரணை நாளில் தனிப்பட்ட முறையில் அல்லது தங்களது வழக்கறிஞர் ( Attorney -at-Law) மூலம் நீதிமன்றத்தில் தோன்றலாம். மேலும், குறித்த கம்பனியின் எந்த கடனளிப்பவருக்கும் அல்லது பங்களிப்பாளருக்கும் அவர்கள் கோரிக்கை விடுத்து நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தினால் கீழ் கையொப்பமிட்டவரால் மனுவின் பிரதியை வழங்கப்படும்.

கையொப்பம் :
சஷீன் அர்சகுலரத்ன கண்ணங்கர,
இல. 11, புனித ஜோசப் பிளேஸ்,
கொழும்பு -14.

குறிப்பு : மேற்கூறிய முறைப்பாட்டு விசாரணையில் தெரிபட விரும்பும் எந்த நபரும், தங்களது அவ்வகையான நோக்கத்தை எழுத்து மூலமாக மேலே குறிப்பிடப்பட்ட சஷீன் அர்சகுலரத்ன கண்ணங்கர அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பில் அந்த நபரின் பெயர் மற்றும் முகவரி அல்லது அது ஒரு நிறுவனம் (Firm) என்றால், அந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன், அந்த அறிவிப்பு சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனம் அல்லது அவர்களின் வழக்கறிஞர் ( (Attorney -at- Law) அவர்களால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். அந்த அறிவிப்பு நேரடியாக வழங்கப்பட்டாலோ அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டாலோ, அது மேலே குறிப்பிடப்பட்டவரை 2026, மே 11 ஆந் திகதி மாலை 6.00 மணிக்குள் சென்றடையுமாறு போதுமான காலத்திற்கு முன்பாக அனுப்பப்பட வேண்டும்.

03- 634

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது